பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 16 புதன்கிழமை 30.06.2021 கதிர் 103

## ஆயுதங்களுடன் இருவர் சிக்கினர்

வெவ்வேறு இரு இடங்களில் ஆயுதங்களுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரத்மலானை, கல்தேமுல்ல பகுதியில் கைக்குண்டுடன் 22 வயதுடைய இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர்,

2

# இந்தியாவை வலிந்து சண்டைக்கு இழுக்கும் செயற்பாடுகளில் சீனா!

## இலங்கை முழு ஒத்துழைப்பு வழங்குகின்றது என்று கூட்டமைப்பு எம்.பி. சிறிதரன் பகிரங்கக் குற்றச்சாட்டு



**(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)**

**இந்தியாவை வலிந்து சண்டைக்கு இழுக்கும் செயற்பாடுகளில் சீனா ஈடுபட்டுள்ளது. அதற்கு இலங்கை முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றது.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.**

2

## யாழ். மாவட்ட செயலகத்துக்கு பாகிஸ்தான் தூதுவர் வருகை

### அதிகாரிகளுடன் முக்கிய பேச்சு



**(இ.கலையமுதன்)**

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் மொஹமட் சாட் கட்டாக் இன்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு வருகை தந்தார்.

அவர், யாழ். மாவட்ட செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

2

### சர்வதேசமே நீதி வழங்கு!

## காணாமல்போனோரின் உறவுகள் வவுனியாவில் இன்று ஆர்ப்பாட்டம்




2

## 'எக்ஸ் — பிரஸ் பேர்ள்' தீயால் 200 உயிரினங்கள் மரணம்!



'எக்ஸ் - பிரஸ் பேர்ள்' கப்பல் தீப்பற்றி விபத்துக்குள்ளானமை மற்றும் அதிலிருந்து

2

### கொரோனாத் தொற்றுப் பரவலால்

## மேலும் சில பிரதேசங்கள் இன்று தொடக்கம் முடக்கம்



நாட்டில் மேலும் சில பிரதேசங்கள் இன்று காலை 6 மணி முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

மொனராகலை, கேகாலை, களுத்துறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களிலுள்ள ஆறு கிராமசேவர் பிரிவுகளே

2

## கழிவுக் குழிக்குள் விழுந்து ஆண் குழந்தை உயிரிழப்பு

### மஸ்கெலியாவில் பெருந்துயர்



இரண்டரை வயது ஆண் குழந்தை ஒன்று கழிவு குழிக்குள் வீழ்ந்து பரிதாபகரமாக பலியான பெருந்துயர் சம்பவம் மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரவுன்ஸ்வீக் தோட்டத்தில் டனட்டார்

2

## கொரோனாச் சட்டத்தை மீறிய மேலும் 433 பேர் சிக்கினார்கள்



தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 433 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்டவிதி முறைகளை மீறியக் குற்றச்சாட்டில்

2

## யாழ். மாவட்ட செயலகத்துக்கு................

(முதலாம் பக்க தொடர்ச்சி)

அதேவேளை, யாழ் மாவட்டத்தின் தற்போதைய அபிவிருத்தி, சமகால நிலைமைகள் தொடர்பில் பாகிஸ்தான் தூதுவருக்குக் காணொலி முறையில் மாவட்ட அரச அதிபர் மற்றும் திணைக் களத் தலைவர்களால் விளக்கமளிக்கப் பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன், மாவட்ட மேலதிக அரச அதிபர் ம.பிரதீபன், மேலதிக அரச அதி பர் (காணி) முரளிதரன், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண் டனர்.

சந்திப்பு தொடர்பில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போதைய கொரோனா கால கட்டத்தில் விவசாயம், கல்வி, கடற் றொழில் போன்ற விடயங்களை எவ் வாறு மேற்கொள்வது என்றும், அதில் உள்ள சவால்கள் தொடர்பிலும் பாகிஸ் தான் தூதுவருக்கு விளக்கமளிக்கப்பட் டது.

குறித்த சந்திப்புகளில் இரு நாடு களுக்கும் இடையில் பொருளாதார வர்த் தக ரீதியாக எவ்வாறு உறவுகளை வலுப் படுத்தலாம் என்பது தொடர்பிலும், பாகிஸ் தானில் கல்வி கற்க விரும்பும் மாணவர் களுக்கு இலவசமாக புலமைப்பரிசில் வழங்குவது தொடர்பிலும் கலந்துரை யாடப்பட்டது - என்றார்.

இலங்கை மக்களுக்கும் பாகிஸ்தா னுக்கும்இடையிலான உறவுஎப்போதும் தொடரும் என்றும், இரண்டாவது தட வையாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தது மகிழ்ச்சி என்றும்பாகிஸ்தான் தூதுவர் மொஹமட் சாட் கட்டாக் தெரி வித்தார்.

பாகிஸ்தான் தூதுவரின் வருகை யையொட்டி யாழ். மாவட்ட செயலக வளா கத்தில் இன்று பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டிருந்தது.

## இந்தியாவை வலிந்து.....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

கிளிநொச்சி, பூநகரி - கௌதாரி முனைப் பகுதியில் சீன நிறுவனமொன்றால் அமைக்கப்பட்டுள்ள கடலட்டை பண்ணையைப் பார்வையிடுவதற் காக இன்று அங்கு சென்றிருந்த போதே சிறிதரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறி னார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித் ததாவது:-

ஏற்கனவே இலங்கையின் தென் பகுதியிலே கால்வைத்துள்ள சீனா தற் போது வடக்கிலும் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

கௌதாரிமுனை மீனவர்கள் கட லட்டை வளர்ப்புக்கு முன்வைத்த கோரிக்கைகள் மறுக்கப்பட்டுள்ள நிலை யில் தற்போது சீனர்கள் இங்கு கடலட் டைப் பண்ணையை நடத்தி வருகின்ற னர்.

இதனைப் பார்க்கும்போது சீனாவுக்கு கடலட்டை ஏற்றுமதி செய்யும் இடமாக இது விளங்கினாலும் இதற்குப் பின்னால் அரசியல் உள்ளது.

இவ்வாறான விடயம் ஈழத்தமிழர் களுக்கு மாத்திரம் அல்லாது இலங் கைக்கு அண்மையிலுள்ள இந்தியாவுக் கும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும்.

இதேவேளை, இந்தியாவை வலிந்து சண்டைக்கு இழுக்கும் மற்றும் இந்தி யாவைக் கண்காணிக்கும் செயற்பாடு களை சீனா முன்னெடுத்து வருகின்றது. அதற்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்குகின்றது.

எவ்வாறாயினும் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள குறித்த கடலட்டை பண்ணை தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள் ளோம் - என்றார்.

## ஆயுதங்களுடன்.......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

டுபாய் நாட்டிலிருந்து போதைப் பொருள் வர்த்தகம் உள்ளிட்ட ஏனைய குற்றச் செயல்களை முன்னெடுத்து வரும் ‘குடு அஞ்சு’ என்பவரின் நண்பர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, கம்பஹா பகுதியில் ரி-56 ரகத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான இருவர் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கழிவுக் குழிக்குள்.....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

பிரிவில் இடம்பெற்றுள்ளது. ஜெய சுந்தரம் சுலஷ்னன் என்ற குழந்தையே இவ்வாறு பலியாகியுள்ளது.

குழந்தை திடீரன நேற்று மாலை முதல் காணாமல்போனதையடுத்து, அக்குழந்தையை தேடும் பணி இடம்பெற்றது. இதன்போது வீட்டுக்கு அருகில் இருந்த சாணிக் குழியில் இருந்து குழந்தை சடலமாக மீட்கப்பட் டது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மஸ்கெலியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மஸ்கெ- லியாப் பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்ற னர்.

குழந்தையின் தாய் குருநாகல் பகுதி யிலுள்ள வீடொன்றில் வீட்டுப் பணிப் பெண்ணாகத் தொழில் புரிகின்றார் எனவும், தந்தையின் அரவணைப் பிலேயே குழந்தை வளர்ந்துள்ளது எனவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவமானது மஸ்கெலியா தோட்டப்பகுதியையே பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

## கொரோனாச் சட்ட......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

இதுவரை 45 ஆயிரத்து 532 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## மேலும் சில......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள் ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

மொனராகலை மாவட்டத்தில் பிபிலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனுல் வெல கிராமசேவகர் பிரிவும், வரக்கா பொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹல்லவ கிராமசேவர் பிரிவில் நியதுரு பொல இலக்கம் 1,2,3,4 ஆகிய தோட்டங்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, கேகாலை மாவட்டத் தில் கன்னகம கிராமசேவகர் பிரிவில் தேவாலகந்தவத்த பிரிவு முடக்கப்பட்டுள் ளது.

மேலும், தெஹியோவிட்ட கொடம்பல கிராம சேவகர் பிரிவில் பம்பேகம தோட் டப் பகுதி முடக்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் தொடங் கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எலதுவ கிராம சேவகர் பிரிவில் எலுதவ தோட்டம் முடக்கப்பட்டுள்ளது.

காலிமாவட்டத்தில்எல்பிட்டியபொலிஸ் பிரிவுக்குட்பட்ட பழைய கொலனி கிராம சேவகர் பிரிவில் திவித்துரு தோட்டம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, களுத்துறை, கம் பஹா, கேகாலை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில்தனிமைப்படுத்தப் பட்டிருந்த ஐந்து கிராமசேவகர் பிரிவுகள் இன்று காலை 6 மணிக்குத் தனிமைப் படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள் ளன என்றும் இராணுவத் தளபதி மேலும் கூறினார்.

## காணாமல்போனோரின்...

(முதலாம் பக்க தொடர்ச்சி)
(வவுனியா நிருபர்)

வவுனியாவில் காணாமல் போன வர்களின் உறவுகளால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியாபழையபஸ்நிலையத்துக்கு முன்பாக இன்று காலை 10 மணிக்கு, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், எங்கே எங்கே உறவுகள் எங்கே?, இராணுவத்தின் கையில் ஒப்படைக் கப்பட்ட உறவுகள் எங்கே?, சர்வதேசமே நீதி வழங்கு போன்ற கோஷங்களை எழுப்பினர்.

## ‘எக்ஸ் - பிரஸ் பேர்ள்’ ....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

வெளியேறிய எண்ணெய், இரசாயனத் திரவங்களால், 200 கடல்வாழ் உயிரி னங்கள் மரணமடைந்துள்ளன என்று சட்டமா அதிபர், நீதிமன்றத்தின் கவனத் துக்குக் கொண்டு வந்துள்ளார்.

கப்பலில் ஏற்பட்ட தீயை அடுத்து ஏற் பட்ட சுற்றுச்சூழல் மாசுபாட்டால் 176 ஆமைகள், 4 திமிங்கலங்கள் மற்றும் 20 டொல்பின்கள் இதுவரையிலும் மரணமடைந்துள்ளன.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@
gmail.com




## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல் களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் ‘காலைக்கதிர்’ சேவையைப் பெற்றுக்கொள்ள

076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

Maligai.lk doorstep grocer

பயணக்கட்டுப்பாடா?
கவலை வேண்டாம்...




உங்களுக்குத் தேவையான காய்கறிகள், பழங்கள் மற்றும் பலசரக்குப் பொருட்களை www.maligai.lk இல் அல்லது 0703123456 இல் ஓடர் செய்து வீட்டிற்கே பெற்றிடுங்கள்!




We are operating during Travel restrictions to serve your home needs. Place your orders on www.maligai.lk or 0703123456 and stay safe.

Shop now on www.maligai.lk
Call & Order 0703123456

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# தேவை; சர்வதேச நடவடிக்கை

நாட்டில் சட்டத்தின் ஆட்சியைத் தொடர்ந்து சிதைவுக்குள்ளாகி வருகின்றது கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிப் பீடம் என்று சர்வதேச மனித உரிமைகள் காப்பகம் வெளிப்படையாகக் குற்றம் சுமத்தியிருக்கின்றது.

சட்டத்தின் ஆட்சி மீதான கோட்டாபய ராஜபக்ஷவின் தாக்குதல் ஒவ்வொரு நாளிலும் உயர்ந்து வருகின்றது என்றும் அது கூறியுள்ளது.

நீதித்துறையில் சிரேஷ்ட நீதியரசர்கள், நீதிபதிகளை நியமிக்கும் முழுக் கட்டுப்பாட்டையும் அரசமைப்புத் திருத்தம் மூலம் தனது கைக்குக் கொண்டு வந்துள்ள நாட்டின் அதிபர், அதன் மூலம் நீதித்துறையைக் குறைமதிப்புக்குள்ளாகியுள்ளார் என்றும் அந்த அமைப்பு விளக்கியிருக்கின்றது.

சட்டத்தின் ஆட்சியை – நீதியின் நிர்வாகத்தை – ஜனாதிபதி கோட்டாபய தனது நடவடிக்கைகள் மூலம் எவ்வாறு பங்கப்படுத்தியுள்ளார் என்பதையும் அது விவரித்துள்ளது.

முன்னைய ஆட்சியில் தமது நெருக்கமான உறவினர்கள் மற்றும் சகா மீது தொடுக்கப்பட்ட வழக்குகள் குறித்து ஆராய ஒரு ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்து, அதன் மூலம் அந்த வழக்குகளைக் கைவிடுமாறான ஒரு பரிந்துரையைப் பெற்றுக் கொண்டு செயற்படுத்த முனைகின்றார். அந்த சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கக் காரணமானவர்கள் எனத் தாம் கருதும் நபர்களை முறையற்ற விதத்தில் தண்டித்துச் சிக்கலில் மாட்ட எத்தனிக்கின்றார்.

ஏற்கனவே சட்டத்தின் மூலம் தண்டிக்கப்பட்ட தனது சகாக்கள் மற்றும் நெருங்கியவர்களை, தமக்குள்ள விசேட மன்னிப்பு அதிகாரத்தின் மூலம் விடுவித்து, சட்டத்தின் ஆட்சியைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளார்.

எட்டுத் தமிழ்ப் பொதுமக்களைக் கொன்ற குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டு உயர் நீதிமன்றத்தினால் அது உறுதி செய்யப்பட்ட நிலையில் அந்த முன்னாள் சிப்பாயை விடுவிக்கின்றார்.

மற்றொரு சக அரசியல்வாதியைச் சுட்டுக் கொன்ற வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டு, ஐந்து நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற ஆயத்தினால் அந்த மரண தண்டனைத் தீர்ப்பு உறுதிப்படுத்தப்பட்டவரை தமது விசேட அதிகாரத்தின் மூலம் நாட்டின் அதிபர் விடுவிக்கின்றார்.

இவ் விடயங்களில் தீர்ப்பளித்த நீதிமன்றங்களின் அறிக்கை, பரிந்துரையைப் பெற்றே இந்த நடவடிக்கையைக் கூட முன்னெடுக்க முடியும். அதையெல்லாம் பெறாமல் தம்பாட்டில் நீதியைக் கையிலெடுத்து விளையாடியிருக்கின்றார் ஜனாதிபதி.

நடைமுறையில் உள்ள மிக மோசமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றியமைப்போம் என்று சர்வதேச சமூகத்துக்கு முன்னைய நல்லாட்சி அரசு உறுதியளித்திருந்தது. அதற்கான முயற்சிகளையும் ஆக்கபூர்வமான திசையில் அது முன்னெடுத்திருந்தது.

ஆனால், கோட்டாபய ராஜபக்ஷ, தாம் ஆட்சி அதிகாரத்துக்கு வந்ததும் பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற கொடூர சட்டவமைப்பை மாற்றியமைக்கும் முயற்சிகளைத் தூக்கிக் கடாசினார். அந்தக் கொடூரச் சட்டம் தொடரும் என்பதைக் கோடி காட்டினார்.

அது மட்டுமல்ல, இந்த விடயங்களை ஒட்டி இரண்டு முரணிலை நடவடிக்கைப் போக்கை அவர் கடைப்பிடிக்கின்றார் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டுகின்றது.

முதலாவது – இந்தச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல்களில் வைக்கப்பட்டு, சித்திரவதை மூலம் பெறப்பட்ட வாக்கு மூலங்களை குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களாகக் காட்டி, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை மிக மோசமாக சிக்கலுக்குள் மாட்டுகின்றது கோட்டாபய அரசு. அதேநேரம் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராக குரோதத்தையும் துவேஷத்தையும் கக்கும் பெரும்பான்மையினரை நடவடிக்கை எடுக்காமல் அது பாதுகாக்கின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற மிருகத்தனமான – அராஜகமான – சட்டத்தை ரத்துச் செய்வதற்குப் பதிலாக அதை இன்னும் மோசமானதாக மாற்றும் நடவடிக்கைகளை அதிபர் கோட்டாபய ராஜபக்ஷ எடுத்து வருகின்றார்.

இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவோரை நீதிமன்றக் காவலுக்கு மாற்றாமல் கொழும்பு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு என்ற பொலிஸ் கட்டமைப்பிலேயே தொடர்ந்து தடுத்து வைத்திருந்து விசாரிப்பதற்கான சட்ட வலிமையை வர்த்தமானி அறிவித்தல் மூலம் விடுக்கின்றார் ஜனாதிபதி.

ஏற்கனவே இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவோர் இந்தப் பொலிஸ் பிரிவில் வைத்து மோசமாக சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர் என்ற குற்றச்சாட்டுப் பிரசித்தம். அங்கேயே இக்கைதிகளை நிரந்ரமாகத் தடுத்து வைக்கலாம் என்ற அறிவிப்பு, சித்திரவதைக் கூடமே அக்கைதிகளுக்கு இனிமேல் நிரந்தர வசிப்பிடம் என்பதை உறுதிப்படுத்தும் நடவடிக்கையாகும்.

கோட்டா அரசின் இந்த எல்லைமீறிய அட்டகாசங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு சர்வதேச சமூகம் விரைந்து ஏதேனும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் சிறுபான்மையின அழிப்பு நிரந்தரமாகத் தொடரும். அதை யாரும் தடுக்க முடியாமல் போய் விடும்.

# பஸிலின் நாடாளுமன்ற வருகை; அச்சத்தில் எதிர்க்கட்சிகள்!

## டிலான் பெரேரா கூறுகிறார்



தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றத்திற்குள் வரும் செய்தி ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா கூறினார்.

கொரோனா வைரஸைப் பார்த்து பயப்படுவதைவிட அவர்கள் அதிகம் பயப்படுகிறார்கள் என்றும் அவர் விமர்சித்துள்ளார்.

வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அவர் –

தற்போதைய கொரோனா பிரச்சினை மற்றும் சமீபத்திய எரிபொருள் விலை உயர்வு இருந்தபோதிலும் எதிர்க்கட்சி மற்றும் ஊடகங்களின் முக்கிய தலைப்பாக இப்போது பஸில் ராஜபக்ஷ குறித்தே உள்ளதாக தெரிவித்துள்ளார்.

பஸில் ராஜபக்ஷவை தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கும் முடிவுக்கு எதிர்க்கட்சிகள் அஞ்சினால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சரியான முடிவை எடுத்துள்ளதாக அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# திஸ்ஸமஹாராமவில் பணியாற்றிய பணியாளர்கள் அணிந்திருந்த சீருடை சீன நிறுவனத்தினுடையது

## சீனத் தூதரகம் தெரிவிப்பு

திஸ்ஸமஹாராம குளத்தில் சுத்திகரிப்பு பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள், சீன நாட்டின் மக்கள் விடுதலை இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் என சீனத்தூதரகம் விளக்கமளித்துள்ளது.

எனினும் அந்தச் சீருடை, சீனாவின் ஒரு நிறுவனத்துக்கு உரியது என்றும் சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சீன நாட்டின் இராணுவச் சீருடையுடன் அவர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர் என சமூக வலைத்தளங்களில் வைரலாகியதையடுத்து, இந்த விடயம் தொடர்பாக எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பியிருந்தன.

இதனையடுத்து, திஸ்ஸமஹாராம குளத்தில் சுத்திகரிப்பு பணியில் ஈடுபட்டிருந்த சீன பணியாளர்கள், இராணுவ சீருடை அணிந்திருந்தமை தொடர்பாகப் பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன சீனத் தூதரகத்திடம் விளக்கம் கோரியுள்ளார்.



பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலளித்துள்ள சீனத் தூதரகம், குறித்த பணியாளர்கள், சீன நாட்டின் மக்கள் விடுதலை இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்று விளக்கமளித்துள்ளது.

இந்த நிலையில், எதிர்காலத்தில் அவ்வாறான இராணுவச் சீருடையை அணிய வேண்டாம் என்று குறித்த பணியாளர்களுக்கு அறிவுறுத்தும்படி, பாதுகாப்பு செயலாளர் சீனத் தூதரகத்திடம் கோரினார் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பஸிலின் வருகைக்காக 113 உறுப்பினர்கள் கையொப்பத்துடன் ஜனாதிபதிக்குக் கடிதம்



பஸில் ராஜபக்ஷவை நாடாளுமன்ற உறுப்பினராக்கக் கோரி, ஆளும் கட்சியின் 113 உறுப்பினர்கள் கடிதம் ஒன்றில் கையொப்பமிட்டுள்ளனர்.

குறித்த கடிதம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) பத்தமுல்லையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் பஸில் ராஜபக்ஷவை நாடாளுமன்றம் வருமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பல தடவைகள் அழைப்பு விடுத்திருந்தார் என்றும் ஜகத் குமார தெரிவித்தார்.

எதிர்வரும் தினங்களில் பஸில் ராஜபக்ஷ இணக்கம் தெரிவிப்பார் என தாம் நம்புகின்றோம் எனவும் ஜகத் குமார குறிப்பிட்டார்.

# ரயில் என்ஜின் ஓட்டுநர்கள் சங்கம் வேலைநிறுத்தத்தில்

ரயில் என்ஜின் ஓட்டுநர்கள் சங்கம் இன்று (புதன்கிழமை) காலை 8 மணி முதல் ஒரு நாள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் என அறிவித்துள்ளனர்.

ரயில் டிக்கெட்டுக்களை மின்னணு முறையில் வழங்குவது தொடர்பான வேலைத் திட்டத்தை வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக குறித்த சங்கத்தின் செயலாளர் இந்திக தொடம்கொட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்ற போதிலும் உரிய பதில் கிடைக்காததால் இவ்வாறு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.

# கொவிட் டெல்டா தொற்று; மேலும் மூவர் அடையாளம்

இந்தியாவில் பரவிவரும் கொரோனா வைரஸின் டெல்டாத் தொற்றுக்கு உள்ளான மேலும் மூவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் மூவரும் கொழும்பில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

குறித்த மூவரும் தற்போது கந்தக்காடு இடைத்தங்கல் மத்திய நிலையத்தில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என அவர் கூறியுள்ளார்.

மேலும் குறித்த மூவரும் கொழும்பு நகரில் நிர்மாணப் பணிகள் இடம்பெறும் பகுதியொன்றில் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவின் அலைகள் உருவாகும் திகதிகள் குறிப்பதை தவிர்க்க வேண்டும்

## டாக்டர் வி.கே.பால் கோரிக்கை



“கொரோனா வைரஸின் தன்மை நம் கணிப்புகளுக்கு அப்பாற்பட்டது என்பதால் அடுத்தடுத்த அலைகள் எப்போதும் உருவாகும் என்பதற்கு திகதி குறிப்பதைத் தவிர்க்க வேண்டும்” என இந்தியாவின் கொரோனாத் தடுப்புக்குழுவின் தலைவர் டாக்டர் வி.கே.பால் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனாவின் இரண்டாவது அலை ஏப்ரல் – மே மாதங்களில் மிகத் தீவிரமாகப் பரவியது. ஒரு நாள் பாதிப்பு மற்றும் உயிரிழப்புகள் அதிகரித்தன. ‘இந்த இரண்டாவது அலைக்கு உருமாற்றம் அடைந்த ‘டெல்டா’ வகை வைரஸ் தாக்கமே காரணம்’ எனக் கூறப்பட்டது. இந்த நிலையில் ‘டெல்டா பிளஸ்’ என்ற புதிய உருமாறிய வைரஸ் வகையும் சமீபத்தில் கண்டறியப்பட்டது.

இந்தியாவில் இதுவரை இந்த டெல்டா பிளஸ் உருமாறிய கொரோனா வைரஸுக்கு 48 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தியாவில் பேரழிவை ஏற்படுத்திய டெல்டா என்ற பி.1.617.2 வைரஸ், AY.1, AY.2.வைரஸ்களாக மேலும் உருமாற்றம் அடைந்துள்ளமை இப்போது கண்டறியப்பட்டுள்ளது.

மூன்றாவது அலை உருவாவதைத் தவிர்க்க முடியாது என்றும் இதில் குழந்தைகள் அதிகம் பாதிக்கப்படுவர் என்றும் நிபுணர்கள் எச்சரித்தனர். ‘டிசெம்பரில் மூன்றாவது அலை உருவாக வாய்ப்பு உள்ளது’ என மத்திய அரசின் கொரோனாப் பணிக்குழுவின் தலைவர் டாக்டர் என்.கே.அரோரா சமீபத்தில் தெரிவித்தார்.

இது குறித்து கொரோனாத் தடுப்புப் படையின் தலைவரும் நிதி ஆயோக் உறுப்பினருமான டாக்டர் வி.கே.பால் கருத்துத் தெரிவிக்கும் போது, ‘உருமாறிய ‘டெல்டா பிளஸ்’ என்ற புதிய வகை வைரஸ் தற்போது கண்டறியப்பட்டுள்ளது. இது குறித்த அறிவியல் பூர்வமான விவரங்கள் ஆரம்ப கட்டத்தில்தான் உள்ளன.

இந்தப் புதிய வகைத் தொற்று வேகமாகப் பரவும் தன்மை உடையதா?, தீவிர பாதிப்புகளை ஏற்படுத்துமா? தடுப்பூசியின் செயல்திறனைப் பாதிக்குமா? என்பவை போன்ற கேள்விகளுக்கு நம்மிடம் முழுமையான பதில் இல்லை. இதற்கு நாம் சில காலம் காத்திருக்க வேண்டும். தொற்றுப் பரவலின் தன்மை என்பது நம் கணிப்புகளுக்கு அப்பாற்பட்டது.

அப்படி இருக்கையில் அடுத்தடுத்த அலைகள் எப்போது நிகழும் என்பது குறித்து திகதிகளை நாமே நிர்ணயிக்காமல் இருப்பதே நலம். அலைகள் எப்போதும் உருவாகும் என்பதற்கு திகதி குறிப்பதைத் தவிர்க்க வேண்டும்’ என்று கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

# செல்பி எடுப்பதற்கு குஜராத்தில் தடை




இந்தியாவின் தெற்கு குஜராத் பகுதியிலுள்ள டாங் மாவட்டம் சுற்றுலாவுக்குப் பிரசித்தி பெற்ற இடமாகும். குறிப்பாக பருவமழைக் காலங்களில் இந்த மாவட்டத்திலுள்ள மலைப் பகுதிகளைப் பார்த்து மகிழவும் அருவிகளில் குளித்து மகிழவும் சுற்றுலாப் பயணிகள் ஏராளமானோர் இங்கே செல்வது வழக்கம்.

தற்போது கொரோனா ஊரடங்கில் தளர்வுகள் அறிவிக்கப்பட்டுவருவதால், இந்தப் பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், டாங் மாவட்டத்தில் செல்பி எடுப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து தகவல் தெரிவித்த மாவட்ட அதிகாரி, ‘வித்தியாசமாக செல்பி எடுப்பதற்காக இளைஞர்கள் எந்த எல்லைக்கும் செல்கின்றனர். அதனால், அவர்கள் பாதிக்கப்படுகின்றனர். கடந்த காலங்களில் செல்பி எடுக்கும் முயற்சியில் சிலர் உயிரிழந்துள்ளனர். பலர், காயமடைந்துள்ளனர். அதனால், செல்பி எடுப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது’ என்று கூறியிருக்கிறார்.

செல்பி எடுக்கும்போது ஏற்படும் விபத்து மற்றும் உயிரிழப்புகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இந்தியாவைத் தொடர்ந்து ரஷ்யா, அமெரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் வரிசையாக உள்ளன.

# தமிழக மக்களுக்காக சிறையில் விரதம் இருந்தேன்

## அ.தி.மு.க. தொண்டரோடு சசிகலா உரையாடல்



முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் தோழி என அறியப்படும் சசிகலா, அ.தி.மு.கவினருடன் பேசும் ஓடியோக்கள் சமீபகாலமாக வெளியாகிவருகின்றன. இதனால், வெறுப்படைந்த அ.தி.மு.கவினர் தங்களது எம்.எல்.ஏக்களின் கூட்டத்தில் சசிகலாவுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் இந்த ஓடியோ விவகாரம் ஓய்ந்ததாக இல்லை.

இந்த நிலையில் நேற்று தேனியைச் சேர்ந்த கண்ணன் என்ற அ.தி.மு.க. தொண்டரோடு சசிகலா தொலைபேசி வாயிலாகப் பேசிய ஓடியோ ஒன்று வெளியாகியுள்ளது.

அதில், ‘கட்சி இப்படி வீணா கிட்டு இருக்குறதை இனியும் என்னால் பாத்துக்கிட்டு சும்மா இருக்கமுடியாது. கட்சி ரொம்ப மோசமான நிலைமைக்கு போயிட்டு இருக்கு. அதை சரி பண்ணனும். நான் இருக்கும் வரை அதை செய்வேன். தேர்தல்ல அவங்க சொன்னபடி ஜெயிப்பாங்கன்னுதான் ஒதுங்கினேன். அவங்க ஜெயிச்சு இருந்தா, தமிழகத்துல 3 ஆவது முறையா அம்மா ஆட்சி வந்திருக்கும். என் கூட பேசுற தொண்டர்களைக் கட்சிய விட்டு நீக்கிட்டு இருக்காங்க.

நான் பெங்களூரு சிறையில் இருந்தாலும் 4 வருஷமா என் உடல்தான் அங்கே இருந்ததே தவிர என் உயிர் தமிழக மக்களை சுற்றியே இருந்துச்சு. நான் சிறையில் இருந்தாக்கூட, தமிழக மக்கள் கொரோனாவால் பாதிக்கப்படக் கூடாதேனு நான் செய்யாத பூஜை கிடையாது. மாதக்கணக்கில் விரதமும் இருந்தேன் என சசிகலா பேசியுள்ளார்.

இந்த ஓடியோ விவகாரம் குறித்து அ.தி.மு.க. வட்டாரத்தினர் கருத்துத் தெரிவிக்கும்போது, ‘சசிகலாவுக்கும் எங்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. கட்சி நிர்வாகிகள் யாரும் அவருடன் தொடர்பில் இல்லை. ஒழுங்கு நடவடிக்கை காரணமாக கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்களிடம் அவர் பேசி வருகிறார். சிறையில் இருந்து வெளியே வந்தபோது அரசியலில் ஈடுபடப்போவது இல்லை என்றார். இப்போது ஏன் இந்த ஓடியோ நாடகத்தை நடத்துகிறார்?

சசிகலா அ.தி.மு.கவை அபகரிக்க முயற்சி செய்கிறார். அவர் தனிக்கட்சி தொடங்குவதென்றால் தொடங்கட்டும். சசிகலா சுற்றுப் பயணம் மேற்கொள்ளப் போகிறார் என்கிறார்கள். தாராளமாகச் சுற்றுப்பயணம் செய்யட்டும். தனிக் கட்சி தொடங்கி அவர் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும். அ.தி.மு.க. போர்வையில் வலம் வருவதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம். அ.தி.மு.கவினர் யாரும் அவரோடு இல்லை’ என்கின்றனர்.

# கொரோனாவுக்கு எதிரான எதிர்ப்பு சக்தி சதவீதம்; தமிழகத்தில் மூன்றாம் கட்ட ஆய்வு ஆரம்பமானது

கொரோனாவுக்கு எதிரான எதிர்ப்பு சக்தி எத்தனை வீதமானவர்களுக்கு உள்ளது என கண்டறியும் மூன்றாவது கட்ட ஆய்வு தமிழகத்தில் ஆரம்பமாகியுள்ளது.

46 சுகாதார மாவட்டங்களிலுள்ள 888 நோய்ப் பாதிப்பு இடங்களில் இந்த ஆய்வை தமிழக சுகாதாரத் துறை நடத்துகிறது. ஒவ்வொரு இடத்திலும் 30 பேரிடமிருந்து மாதிரிகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்ட ஆய்வில் 31% பேருக்கும் இரண்டாம் கட்ட ஆய்வில் 23% பேருக்கும் எதிர்ப்பு சக்தி இருந்தமை கண்டறியப்பட்டது. கொரோனாத் தொற்று பாதித்த நபர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்துள்ளதா? என்பது குறித்தான இரண்டாம் கட்ட ஆய்வு (SERO SURVEY) கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் இந்தாண்டு பெப்ரவரி மாதம் வரை தமிழக பொதுச் சுகாதாரத் துறை இயக்குநர் செல்வ விநாயகம் தலைமையில் நடத்தப்பட்டு அண்மையில் முடிவுகள் வெளியிடப்பட்டன.

அதில் சென்னையைத் தவிர்த்து அனைத்து மாவட்டங்களிலும் கொரோனாத் தொற்று அதிகம் பாதித்த 765 இடங்களில் 22,905 பேரிடம் ஆய்வு நடத்தப்பட்டது. அதில், 5,316 பேர் அதாவது 23 சதவீதத்தினருக்கு மட்டுமே நோய் எதிர்ப்புச் சக்தி உள்ளது எனவும் அதிகபட்சமாக திருவள்ளூர் மாவட்டத்தில் 49% பேருக்கும், குறைந்தபட்சம் நாகை மாவட்டத்தில் 9% பேருக்கும் நோய் எதிர்ப்புச் சக்தி இருப்பதாகவும் அடையாளப் படுத்தப்பட்டிருந்தது.

முன்னதாக முதல் ஆய்வு கடந்தாண்டு ஓகஸ்ட் மாதத்தில் நடத்தப்பட்டது. அப்பொழுது, 22,690 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதில் தமிழகத்தில் 31% பேருக்கு நோய் எதிர்ப்பு சக்தி இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. அதில் அதிகபட்சமாக பெரம்பலூர் மாவட்டத்தில் 49% ஆகவும், குறைந்தபட்சமாக நீலகிரி மாவட்டத்தில் 13% ஆகவும் பதிவாகியிருந்தது.



தற்போது தினசரி தடுப்பூசி செலுத்துவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு, உருமாறிய கொரனோ வைரஸ் பாதிப்புகள் ஆகியவை கண்டறியப்பட்ட நிலையில், தற்போது மூன்றாவது கட்ட SERO கணக்கெடுப்பு ஆய்வில் கொரோனாத் தடுப்பூசிகள், நோய்க்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துள்ளனவா என்றும், உருமாறிய வகை வைரஸ் பாதிப்புகள் தாக்கம் குறித்தும் கண்டறிய இந்த ஆய்வின் முடிவுகள் உதவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழகத்தின் புதிய சட்டம் ஒழுங்கு டி.ஜி.பியாக சைலேந்திரபாபு ஐ.பி.எஸ்.

தமிழ்நாட்டின் டி.ஜி.பியாக உள்ள திரிபாதி இன்றுடன் ஓய்வுபெறுவதால் புதிய சட்டம் ஒழுங்கு டி.ஜி.பியை தேர்வு செய்யும் பணிகள் சில நாள்களாக நடந்து வந்தன. டி.ஜி.பி. பதவியைக் கைப்பற்ற கடுமையான போட்டி நிலவிவந்த நிலையில், அது தொடர்பான பட்டியலை மத்திய பணியாளர் தேர்வாணையத்திற்கு தமிழக அரசு அனுப்பியது. அங்கே உறுதிப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் புதிய சட்டம் ஒழுங்கு டி.ஜி.பி.யாக சைலேந்திரபாபுவை தமிழக அரசு நியமித்துள்ளது.



1987 ஆம் ஆண்டு ஐ.பி.எஸ். அதிகாரியாகத் தேர்வு பெற்ற சைலேந்திரபாபு, தர்மபுரி மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளராகப் பணியைத் தொடங்கியவர். அதன் பின்னர், துணை ஆணையர், இணை ஆணையர், ஆணையர், வடக்கு மண்டல ஐ.ஜி, சிறைத் துறை ஏ.டி.ஜி.பி. என பல்வேறு பதவிகளை இவர் வகித்துள்ளார். ரயில்வே துறை டி.ஜி.பியாகப் பணியாற்றி வந்த இவர், இன்று முதல் தமிழகத்தின் புதிய சட்டம் ஒழுங்கு டி.ஜி.பியாகப் பொறுப்பேற்றுள்ளார்.

# அதிகரிக்கும் டெல்டா வகைக் கொரோனா ஊரடங்கால் வீட்டில் ஆஸ்திரேலிய மக்கள்



சீனாவில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸின் தாக்கம் உலக நாடுகளை அச்சுறுத்தி வருகிறது. கொரோனா வைரஸ் உருமாறி டெல்டா பிளஸ் கொரோனாவாக பரவி கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில், மின்னல் வேகத்தில் பரவி வரும் டெல்டா பிளஸ் கொரோனாவுக்கு ஆஸ்திரேலியாவும் தப்பவில்லை.

டெல்டா பிளஸ் கொரோனா வேகமாகப் பரவி வருவதையடுத்து ஆஸ்திரேலியாவின் 4 நகரங்களில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கு ஆஸ்திரேலியாவின் தலைநகரான பெர்த் நகரில் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு முதல் 4 நாள்களுக்கு ஊரடங்கு அமுல்படுத்தப்படுகிறது.

குயின்ஸ்லாந்து தலைநகர் பிரிஸ்பேன் நகரில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை முதல் அடுத்த 3 நாள்களுக்கு ஊரடங்கு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

ஏற்கனவே, சிட்னியில் ஜுலை 9 ஆம் திகதி வரையிலும், டார்வின் நகரில் வரும் வெள்ளிக்கிழமை வரையிலும் முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு உள்ளது. மேலும், நியு சவுத் வேல்ஸ் உள்ளிட்ட நகரங்களிலும் ஊரடங்கு அமலில் உள்ளது.

ஆஸ்திரேலியா முழுவதும் 257 பேர் டெல்டா பிளஸ் கொரோனாவுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். நியு சவுத் வேல்சில் அதிகம் பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மக்கள் மருத்துவம் உள்ளிட்ட அவசர காரணங்கள் இன்றி வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம் என பல்வேறு நகரங்களில் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் அஸ்ட்ரா ஜெனகா தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. மொத்த மக்கள் தொகையில்5 சதவீதம் பேருக்கு மட்டுமே தடுப்பூசி போடப்பட்டுள்ளது. தடுப்பூசி போடாததால் டெல்டா வகை கொரோனா அதிகமாக பரவுகிறது எனவும் அந்நாட்டு சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

## பேஸ்புக்கின் பங்குகள் கிடுகிடுவென உயர்வு

பேஸ்புக் நிறுவனம் மீதான வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை அடுத்து ஒரேநாளில் அந்நிறுவனத்தின் சந்தை மூலதனம் 1 டிரில்லியன் டொலர் அளவை எட்டியது.

சிறு குறு நிறுவனங்களை அச்சுறுத்துவது, ஏகபோகமாக செயல்படுவது உள்ளிட்ட பல்வேறு காரணங்களை முன்னிறுத்தி பேஸ்புக் நிறுவனம் மீது வழக்குத் தொடரப்பட்டது.

மேலும் அந்நிறுவனத்தின் இதர சமூக வலைதள பக்கங்களான இன்ஸ்டாகிராம், வாட்ஸ் அப் உள்ளிட்டவைகளை விற்க வழிவகை செய்ய கோரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த கொலம்பியா மாகாண நீதிபதி தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். இதையடுத்து ஒரே நாளில் பேஸ்புக் சந்தை மதிப்பு கிடுகிடுவென உயரத் தொடங்கியது.

அந்நிறுவன பங்குகள் 4 சதவீதம் உயர்ந்து ஒட்டுமொத்த சந்தை மூலதனம் 1 டிரில்லியன் அமெரிக்க டொலர் அளவை எட்டியது. மேலும் 1 டிரில்லியன் டொலர் சந்தை மூலதனத்தை எட்டிய அமெரிக்க நிறுவனங் களில் ஆப்பிள், மைக்ரோசாப்ட்,அமேசான், கூகுள் ஆல்பபெட் நிறுவனங்கள் வரிசையில் 5 ஆவது நிறுவனமாக பேஸ்புக் முன்னேறியது.

## 3-17 வயது வரையிலானோருக்கு சீனத் தடுப்பூசி பாதுகாப்பானது



கொரோனா வைரஸ் தொற்றை உலகத்துக்கு பரப்பிய சீனா 3 முதல் 17 வயது வரையிலானவர்களுக்கு ஒரு தடுப்பூசியை உருவாக்கி உள்ளது. சைனோவேக் நிறுவனம் தயாரித்துள்ள இந்த தடுப்பூசிக்கு கொரோனாவேக் என்று பெயர்.

இந்த தடுப்பூசியை 550 இளம் வயதினருக்கு செலுத்தி பரிசோதிக்கப்பட்டது.

இந்த தடுப்பூசியின் 2 டோஸ்களை செலுத்திக்கொண்டவர்களில் 96 சதவீதத்துக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனாவுக்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தி உருவாகி உள்ளது.

லேசான அல்லது மிதமான பக்க விளைவுகள் கண்டறியப்பட்டுள்ளன. ஊசி போட்ட இடத்தில் ஏற்பட்ட வலிதான் பெரும்பாலும் பக்க விளைவாக தெரிய வந்துள்ளது.

ஒரே ஒருவருக்கு நிமோனியா ஏற்பட்டுள்ளது. ஆனால் இதற்கும் தடுப்பூசிக்கும் தொடர்பு இல்லை என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

மொத்தத்தில் இந்தத் தடுப்பூசி, 3 முதல் 17 வயது வரையிலானவர்களுக்கு பாதுகாப்பானது, பயனுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

இந்த தகவல்கள் 'லேன்செட்' தொற்று நோய்கள் பத்திரிகையில் இடம் பெற்றுள்ளன.

## தெற்காசிய நாட்டவர்கள் மாலைதீவுக்கு வர அனுமதி



வரும் 15 ஆம் திகதி முதல் தெற்காசிய நாடுகளை சேர்ந்தவர்கள் மாலைத் தீவுகளுக்கு வர அனுமதி வழங்கப்படும் என அதிபர் இப்ராகிம் முகம்மத் சோலிஹ் அறிவித்துள்ளார். RT-PCR நெகடிவ் சான்றிதழ் மட்டும் இதற்கு போதுமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாப் பரவல் காரணமாக மே மாதம் 13 ஆம் திகதி இந்தியா உள்ளிட்ட தெற்காசிய நாட்டவருக்கு மாலைதீவு அரசு பயணத் தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது.

## இரண்டு கோடி கொவேக்சின் வாங்கும் ஒப்பந்தத்தை ரத்து செய்தது பிரேஸில்

இந்தியாவின் பாரத் பயோடெக் நிறுவன கொவேக்சின் தடுப்பூசியை கொள்முதல் செய்யும் ஒப்பந்தத்தை ரத்து செய்யப் போவதாக பிரேஸில் சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.

60 ஆயிரம் கோடி இலங்கை ரூபா மதிப்பில் 2 கோடி கொவேக்சின் தடுப்பூசியை கொள்முதல் செய்வதில் போடப்பட்ட ஒப்பந்தத்தில் பிரேஸில் அதிபர் ஜெயிர் போல்சனேரோ முறைகேட்டில் ஈடுபட்டார் என புகார் எழுந்தது. தடுப்பூசி கொள்முதலில் பாரத் பயோடெக் நிறுவனம் விதிமுறைகளை மீறியதாகவும், சட்ட விரோதப் போக்கை கடைப்பிடித்ததாகவும் பிரேஸில் சுகாதாரத் துறை தெரிவித்து உள்ளது.

தடுப்பூசி கொள்முதலில் முறைகேடுகள் நடந்துள்ளதா என்பதை தீர விசாரிக்க குழு அமைக்கப்பட்டு உள்ளதாக சுகாதாரத்துறை தெரிவித்து உள்ளது. ஏற்கனவே கொரோனாக் கட்டுப்பாடுகளை கையாள்வதில் குளறுபடி, மக்களுக்கு தடுப்பூசி செலுத்துவதில் மெத்தனப் போக்கை கடைப்பிடித்தமை உள்ளிட்ட வைகளால் அதிபர் மீது கட்டும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

# கிம் ஜாங் அன் தோற்றத்தை கண்டு மனமுடைந்த வடகொரிய மக்கள்



வடகொரிய நாட்டின் தலைவர் கிம் ஜாங் அன்னின் உடல் நிலை குறித்து அண்மைக் காலமாக சர்வதேச இடங்களில் பல்வேறு மாறுபட்ட செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

கடந்த ஆண்டு கொரோனா வைரஸ் பரவத்தொடங்கிய சமயத்தில் கிம் ஜாங் அன் பல மாதங்கள் வெளியுலகில் தலைகாட்டாமல் இருந்து வந்தார்.

இதனால் அவர் கோமா நிலைக்குச் சென்று விட்டார் எனவும், இறந்து விட்டார் எனவும் பல்வேறு தகவல்கள் சர்வதேச ஊடகங்களில் உலா வந்தன. எனினும் கிம் ஜாங் அன் சில மாதங்களுக்கு பின் பொதுவெளியில் தோன்றி சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

இந்த நிலையில் மீண்டும் சில மாதங்கள் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் இருந்து வந்த கிம் ஜாங் அன், அண்மையில் ஆளும் கட்சியின் கூட்டத்தில் பங்கேற்றார்.

அப்போது கிம் ஜாங் அன் வழக்கத்தை விடவும் மிகவும் மெலிந்த நிலையில் காணப்பட்டார். இதனால் அவரது உடல்நிலை குறித்து சர்வதேச ஊடகங்களில் மீண்டும் பல்வேறு யூகங்கள் எழத் தொடங்கி உள்ளன.

இந்த நிலையில் கிம் ஜாங் அன்னின் தற்போதைய தோற்றம் கண்டு மனமுடைந்த வடகொரிய மக்கள் அவரது உடல்நிலை குறித்து மிகுந்த கவலை கொண்டிருக்கின்றனர் என அந்த நாட்டு அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

தனது அடையாளங்களை வெளியிட விரும்பாத வடகொரிய பிரஜை ஒருவர், கிம்மின் தோற்றத்தை நாங்கள் பார்த்தபோது எங்கள் மக்களின் இதயம் மிகவும் வேதனை அடைந்தது. அவரை பார்க்கிறபோது இயற்கையாகவே தங்கள் கண்ணில் கண்ணீர் வழிவதாக எல்லோரும் கூறுகின்றனர் எனத் தெரிவித்தார்.

## கொரோனாப் பாதிப்பில் இந்தியாவை பின்னுக்குத் தள்ளி பிரேஸில் மீண்டும் முதலிடத்தில்



கடந்த 24 மணி நேரத்தில் பிரேஸிலில் 65 ஆயிரம் பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டமையால் பாதிப்பளவில் முதலிடம் என்ற மோசமான இடத்துக்குச் சென்றது.

நேற்று முன்தினம் கணக்கீட்டின்படி 37 ஆயிரம் பேருக்குத் தொற்று என்ற அளவில் இந்தியா முதலிடத்திலும், 28 ஆயிரம் பேருக்கு கொரோனா என்ற அளவில் பிரேஸில் 2 ஆம் இடத்திலும் இருந்தன. இந்நிலையில் நேற்று மட்டும் அந்நாட்டில் ஆயிரத்து 800 பேர் பெருந் தொற்றுக்கு உயிரிழந்துள்ளனர். இதனால் இதுவரை அந்நாட்டில் கொரோனா பாதிப்பால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5 லட் சத்து 16 ஆயிரமாக உயர்ந்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கிழக்கில் கொரோனா அலை உச்சம் சுகாதார பரிசோதகர்கள் களப்பணியில்

## உள்ளூர் மற்றும் பிரதான வீதிகளில்





சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம்.அல் அமீன்றிசாடின்வேண்டுகோளுக்கிணங்க பிரயாணக் கட்டுப்பாடு வரையறை தளர்த்தப்பட்டாலும் கிழக்கில் உக்கிரமடைந்து வரும் கொரோனா அலையை கட்டுப்படுத்தும் நோக்கில் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் உள்ளூர் மற் றும் பிரதான வீதிகளில் களப்பணிகள் இடம் பெற்று வருகின்றன.

மக்களின் சுகாதார நலன்கருதி சந்தைகள், பொது இடங்கள் மற்றும் பொது வீதிகள் போன்ற இடங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு மேற்பார்வை குழு நியமிக்கப்பட்டு களச் செயற்பாடுகள் நாளந்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இக் களப்பணிக்கு பொதுச் சுகா தார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பல்நோக்கு அபிவிருத்தி செயலணி குழுவும் கலந்து கொண்டு சுகாதார வழிமுறைகளை கண்காணித்து வருகின்றனர்.

# கல்லராவ கடற்கரையில் கரையொதுங்கிய சுறா



திருகோணமலை குச்சவெளி கல்லராவ கடற்கரையில் இறந்த நிலையில் சுறா ஒன்றில் உடல் கரை ஒதுங்கியுள்ளது.

நேற்றுக்காலைபதினைந்துஅடியுடைய பெரியசுறாஒன்றுகரையொதுங்கியுள்ளது.

இறந்த சுறாவின் உடலை அகற்றி கரைக்குக் கொண்டு வந்துள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் பத்திற்கும் மேற்பட்ட சுறாக்கள் உயிருடன் கரையொதுங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

# ஒலுவில் தொடக்கம் அட்டாளைச்சேனை வரை கடற்கரை வீதிகளுக்கு காபற் இடும் பணி ஆரம்பம்






ஜூன் 30.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் நாட்டில் உள்ள ஒரு லட்சம் கிலோமீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் படி 41 கோடி ரூபா செலவில் ஒலுவில், பாலமுனை தொடக்கம் அட்டாளைச் சேனை வரையிலான கடற்கரை வீதிகளுக்கு காபற் இடும் வேலைத்திட்டம் கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமினால் ஆரம்பித்து வைக் கப்பட்டது.

பாலமுனை பிரதேசத்தின் மின்ஹாஜ் வட்டாரத்தின் செயற்பாட்டாளர் எம்.ஏ. அபூபக்கரின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முன்னாள் மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, அட்டாளைச்சேனை பிரதேச சபை தவிசாளர் ஏ.எல்.எம். அமானுல்லாஹ், பிரதேசசபை உப தவிசாளர் எஸ்.எம்.எம். ஹனிபா உட்பட மேலும் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் சேதனப் பசளை மாதிரித் தோட்டம் அமைக்க நடவடிக்கை

## கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அறிவிப்பு

பாடசாலைகள் ஆரம்பித்தவுடன் கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் சேதனப் பசளை மூலமான மாதிரி தோட்டம் அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் இன்று (30) நடைபெற்ற கூட்டத்தின் போதே, அவர் இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த முடிவை உண்மையாக்குவதற்கு இது செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் ஆளுநர் கூறியுள்ளார்.

இந்த புதிய விடயத்தை மாணவர்களின் இதயங்களில் அறிமுகப்படுத்துவதன் மூலம், நாட்டின் எதிர்கால தலைமுறை நிச்சயமாக நிலையான விவசாயத்தை நோக்கி நகரும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

இது குறித்து அனைத்து அதிபர்களுக்கும் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் சேதனப் பசளை செய்கை விவசாயம் தொடர்பில் மாணவர்களுக்கு கற்பிக்க பாடசாலை பாடத்திட்டத்தில் வாரத்துக்கு ஒரு நேரமாவது சேர்க்கப்பட வேண்டும் என்றும் ஆளுநர் மேலும் அறிவுறுத்தியுள்ளார்.

# கொரோனா வைரஸ் ஒட்டு மொத்தமாக அனைத்து செயற்பாட்டையும் முடக்கியது

## ஏறாவூர் நகர சபையின் தலைவர் நழீம் தெரிவிப்பு



கொரோனா வைரஸ் தொற்றுப் பாதிப்பு ஒட்டு மொத்தமாக அனைத்தையும் முடக்கியுள்ளதாக ஏறாவூர் நகர சபையின் தலைவர் எம்.எஸ். நழீம் தெரிவித்தார்.

சபையின் 39வது மாதாந்த அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை நகரசபை சபா மண்ட பத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் தொடர்ந்து தலைமை உரையாற்றிய தவிசாளர் நழீம் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று அதிவேகமாகப் பரவி வரும் நிலையில் அதன் தாக்கம் ஏறாவூர் நகர பிரதேசத்தையும் விட்டு வைக்கவில்லை.

பொருளாதாரம், வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்பனவற்றோடு ஆன்மீக வணக்க வழிபாடுகளையும் முடக்கியுள்ளன.

இதனால் மக்கள் சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

பயணக்கட்டுப்பாடு அன்றாட இடம் பெயர் கூலித் தொழிலாளி மக்களின் வாழ்வாதாரத்தை அடியோடு புரட்டிப் போட்டுள்ளது.

எமது பிரதேசத்தில் கொவிட் மரணங்கள் நிகழ்வதையும், தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரிப்பதையும் வைத்து பொதுமக்கள் இத்தருணத்தில் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்க வேண்டும்.

பிரதேச கொரோனா வைரஸ் தடுப்பு செயலணியின் தீர்மானங்களுக்கு அமைவாக கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு நகர சபையால் ஆக்கபூர்வமான திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

அதேவேளை பல்வேறு பகீரதப் பிரயத்தனங்களின் ஊடாக பொதுமக்களுக்கான சேவைகளையும் நிவாரணங்களையும் வழங்கி வருகின்றோம்.

பயணக்கட்டுப்பாடு காலங்களில் பொதுமக்களின் வீடுகளுக்கு பொருள்கள் கொண்டுசெல்வதற்கு நடமாடும் விற்பனை முறைமைகளை அனுமதித்து முறையாக ஒழுங்கமைக்கப்பட்டு இடம்பெற்று வருகின்றது.

நாம் எமது குடும்பத்தாரைக் கவனிப்பது போல இரவு பகல் பாராது இந்த நகர பிரதேச மக்களைக் கவனித்து சேவையாற்றி வருகின்றோம் - என்றார்.

# மீராவோடை, மாஞ்சோலை பகுதிகள் விடுவிப்பு


கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்கள் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளன.

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக கடந்த 11 ஆம் திகதி மீராவோடை கிழக்கு, மீராவோடை மேற்கு மற்றும் மாஞ்சோலை ஆகிய மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் முடக்கப்பட்டிருந்தன.

குறித்த மூன்று பிரதேசங்களும் 19 நாள்களின் பின்னர் நேற்று விடுவிக்கப் பட்டுள்ளன.

அந்தவகையில், தனிமைப்படுத்தல் பகுதியை விடுவிப்பு செய்ய உதவிய மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க. கருணாகரன் மற்றும் கடமையில் ஈடுபட்ட இராணுவத்தினர், பொலிஸார் ஆகியோர்களுக்கு ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தனது நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பில் நேற்று 107 பேருக்கு கொரோனாத் தொற்று கண்டறிவு



மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று 107 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் மூவர் உயிரிழந்துள்ளனர் எனவும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப் பட்டு வரும் நிலையில் தொடர்ந்து அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் எழுமாறாக இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 29 பேருக்கும் களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் வாழைச் சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேருக்கும், காத்தான்குடி சுகா தார வைத்திய அதிகாரி பிரிவில் 17 பேருக் கும், கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 17 பேருக்கும், ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேருக்கும், செங்கலடி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 05 பேருக்கும், ஏறாவூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 20 பேருக் கும்,ஆரையம்பதி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 13 பேருக் கும்,வெல்லாவெளி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் சிறைச்சாலையில் இருவருக்குமாக நேற்று மாத்திரம் 107 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும், காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும், ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருமாக கொரோனா தொற்று காரணமாக நேற்று மூன்று பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர்

# 25 ஆண்டுகளுக்குப் பின்னர் நொக்-அவுட்டில் இங்கிலாந்து வெற்றி



வெம்ப்ளியில் நடைபெற்ற இங்கிலாந்து-ஜேர்மனி அணிகளுக்கு இடையிலான யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் நொக்-அவுட் சுற்று ஆட்டத்தில் இங்கிலாந்து அணி ஜேர்மனியை 2-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தது.

இங்கிலாந்து அணியில் பிரமாதமாக ஆடிய ரஹீம் ஸ்டெர்லிங் 75 ஆவது நிமிடத்தில் முதல் கோலை அடித்து முன்னிலை அளிக்க, ஹரிகேன் 86 ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலை அடித்து வெற்றியை உறுதி செய்தார், ஜேர்மனி பிரமாதமான அணியை வைத்துக்கொண்டு தோற்று வெளியேறியது.

யூரோ கிண்ணத் தொடரில் 1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இங்கிலாந்து நொக்-அவுட் சுற்றில் வெற்றி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இறுதியாக ஸ்பெயினுக்கு எதிராக பெனால்டி ஷூட் அவுட்டில் வென்றிருந்த இங்கிலாந்து, இதே வெம்ப்ளியில் ஜேர்மனியிடம் 1996 இல் அடிவாங்கி வெளியேறியது.

1966 ஆம் ஆண்டில் வெம்ப்ளில் நடைபெற்றிருந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஜேர்மனியை வீழ்த்தி இங்கிலாந்து தன் ஒரே உலகக் கிண்ணக் கால்பந்தாட்டச் சம்பியன் பட்டத்தை வென்றிருந்தது நினைவு கூரத்தக்கது.

காலிறுதியில் உக்ரைனைச் சந்திக்கிறது இங்கிலாந்து. மற்றொரு ஆட்டத்தில் உக்ரைன் அணி சுவீடனை 2-1என்று வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றிருக்கிறமை குறிப்பிடத்தக்கது.

# ஒருநாள் கிரிக்கெட் தொடரையும் தோல்வியோடு ஆரம்பித்தது இலங்கை



செஸ்டர்லீஸ்ட்ரீட்டில் நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில் இலங்கை அணியைக் இங்கிலாந்து அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து கப்டன் ஒயின் மோர்கன் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார். முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இலங்கை அணி 42.3 ஓவர்களில் 185 ரன்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இலங்கை அணியின் கப்டன் குசல் பெரேரா 73, ஹசரங்க 54 ஓட்டங்களை எடுத்தனர்.

அடுத்து ஆடிய இங்கிலாந்து அணி ஒரு கட்டத்தில் 4 விக்கெட்டுக்களை 80 ஓட்டங்களுக்குள் இழந்து தடுமாறியது. ஆனால், அதன் பின்னர் ஜோ ரூட் ஆட்டமிழக்காது 79 ஓட்டங்களைச் சேர்ந்து, இங்கிலாந்தை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

34.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது இங்கி லாந்து.

இந்தப் போட்டியில் கிறிஸ் வோக்ஸ் 18 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றி ஒரு நாள் போட்டிகளில் 150 விக்கெட்டுகள் என்ற மைல்கல்லை எட்டினார். போட்டியின் நாயகனா கவும் அவரே தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நாளை நடைபெறவுள்ளது.

# யூரோ கிண்ணத் தொடரின் காலிறுதியில் ஸ்பெய்ன் விறுவிறுப்பான போட்டியில் குரேஷியாவை வீழ்த்தியது



கொபன்ஹேகனில் நடைபெற்ற யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் நொக்-அவுட் சுற்றுப் போட்டியில், ஸ்பெயின் அணி 5-3 என்ற கோல் கணக்கில் குரேஷியாவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது.

ஸ்பெயின் அணி ஆரம்பத்திலேயே மிகப்பெரிய தவறு ஒன்றைச் செய்து சேம்சைட் கோல் போட்டு குரேஷியாவுக்கு முன்னிலையை அளித்தது. ஸ்பெய்ன் வீரர் பெட்ரோ கொன்சாலேஸ் தங்கள் கோல் காப்பாளருக்குப் பந்தை அடிக்க, அவரோ பந்தை நிறுத்துகிறேன் பேர்வழி என்று முயல பந்து அவரது காலில் பட்டு கோல்போஸ்ட்டுக்குள் உருண்டு சென்றது. ஸ்பெயினுக்கு அதிர்ச்சி, குரேஷியாவுக்கோ 1-0 முன்னிலை கிடைத்தது.

இப்படி ஒரு சேம்சைட் கோலை ஈடு கட்டும் விதமாக, கூடுதல் நேரத்தில் குரேஷியாவின் அன்ட்ரே கிரமரிச் அடித்த அபாரமான பந்தை, அற்புதமாகத் தடுத்தார் ஸ்பெய்ன் கோல் காப்பாளர் சிமொன். 38 ஆவது நிமிடத்தில் திரும்பி வந்த பந்தினை பாப்லோ சபாரியா கோலாக மாற்ற, ஸ்பெயின் முதல் கோலை அடித்து சமன் செய்தது.

இடைவேளைக்குப் பிறகு ஸ்பெயின் வீரர்களான சீசர் 57 ஆவது நிமிடத்திலும் ஃபெரன் டாரஸ் 77 ஆவது நிமிடத்திலும் கோல்களை அடிக்க ஸ்பெயின் 3-1 என்று முன்னிலை பெற்றது. ஆனால், ஆட்டம் முடிய 5 நிமிடங்களே இருந்த நிலையில் எதிர்பாராவிதமாக குரேஷியா ஒரு கோலை அடித்தது. அந்த அணியின் மிஸ்லவ் ஓரிசிச் இரண்டாவது கோலை அடித்து ஆட்டத்தைப் பரபரப்பாக்கினார்.

90 நிமிடங்கள் முடிந்து, உதிரி நேரத்தில் குரேஷிய வீரர் மரியோ பசலிச் தலையால் முட்டி இன்னொரு கோலை அடிக்க ஆட்டம் 3-3 என்று சமனாகி, மேலதிக நேரத்துக்கு ஆட்டம் நகர்ந்தது.

ஆனால், கூடுதல் நேரத்தில் ஸ்பெயின் முழுமையான ஆதிக்கத்தைச் செலுத்தியது. அந்த அணியின் அல்வாரோ மொராட்டோ 100 ஆவது நிமிடத்தில் அடித்த கோல், அணியின் நான்காவது கோலாக, 103 ஆவது நிமிடத்தில் மிகேல் அயர்சபல் இன்னொரு கோலை அடித்து ஸ்பெயினின் கோல் எண்ணிக்கையை ஐந்தாக்கினார். 5-3 என்று குரேஷியாவை வீழ்த்தியது ஸ்பெயின்.

யூரோ 2012 இல் கிண்ணத்தை வென்ற பின்னர், ஸ்பெயின் முதல் முறையாக நொக்-அவுட் சுற்றில் வெற்றி பெற்றிருக்கிறது. வரும் வெள்ளிக்கிழமை சுவிட்ஸர்லாந்துடன் காலிறுதியில் மோதுகிறது ஸ்பெய்ன். இந்தப் போட்டி செயிண்ட் பீட்டர்ஸ்பர்கில் நடைபெறவுள்ளது.

# ஒரேயொரு ஓட்டத்தால் மேற்கிந்தியத்தீவுகள் தோல்வி தொடரில் 2—1 என முன்னிலை பெற்றது தென்னாபிரிக்கா



மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான பரபரப்பான ரி-20 கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்கா ஒரேயொரு ஓட்ட வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

இவ்விரு அணிகளுக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரின் 3 ஆவது போட்டி நேற்று நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 167 ஓட்டங்களை எடுத்தது. குயின்டன் டி கொக் 72 ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் 7 விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்று ஒரேயொரு ஓட்டத்தால் தோல்வியடைந்தது.

இருபதாவது ஓவரில் வெற்றிக்கு 15 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், இறுதிப் பந்தில் ஃபபியன் அலன் சிக்சர் அடித்தும் மேற்கிந்தியத் தீவுகள் அணியால் வெற்றிபெற இயலவில்லை. போட்டியின் நாயகனாக 4 ஓவர்களில் 13 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 2 விக்கெட்டுக்களை முக்கிய தருணத்தில் வீழ்த்திய தென்னாபிரிக்காவின் தப்ரைஸ் ம்சி தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் ரி-20 தொடரில் தென்னாபிரிக்கா 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான நான்காவதும் தொடரின் வெற்றி யாருக்கு என்பதைத் தீர்மானிப்பதுமான ரி-20 போட்டி நாளையதினம் நடைபெறவுள்ளது.

# பஸில் ராஜபக்ஷ தொடர்பில் ஜனாதிபதியே முடிவெடுப்பார்

## அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய தெரிவிப்பு

பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்பது மற்றும் அமைச்சராக கடமைகளைப் பொறுப்பேற்பது தொடர்பாக இன்னும் ஒரு முடிவும் எட்டப்படவில்லை என அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார்.

அவர் நாடாளுமன்றத்துக்கு நுழைவது தொடர்பான தீர்மானத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே மேற்கொள்வார் என்றும் அவர் கூறினார்.

அவ்வாறு முடிவு எட்டப்படும் சந்தர்ப்பத்தில் பஸில் ராஜபக்ஷ வின் நாடாளுமன்ற பிரவேசம் தொடர்பில் அறிவிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ, நாடாளுமன்றத்துக்கு செல்வதற்கு 36 பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



# எந்த சீன இராணுவமும் இலங்கையில் இல்லை

## அரசு அறிவிப்பு

திஸ்ஸமஹாராம பகுதியில் குளப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களில் சிலர் சீன இராணுவத்திற்கு ஒத்த உடையை அணிந்திருக்கின்றனர் எனத் தகவல்கள் வெளிவந்ததைத் தொடர்ந்து தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக குற்றவியல் புலனாய்வுத் திணைக்களமும் இராணுவமும் சுயாதீன விசாரணைகளை மேற்கொண்டன எனவும் அவர் தெரிவித்தார்.

குறித்த நபர்களால் எந்த விதிமுறைகளும் மீறப்படவில்லை என சட்ட அமுலாக்க அதிகாரிகளால் அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டார்.

மேலும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தால் சீருடை வழங்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

# தீ விபத்துக்கு உள்ளான பேர்ள் கப்பலில் இருந்து 40 வீதமான பிளாஸ்டிக் கழிவுகளே கரையொதுக்கம்

## சுற்றாடல் அமைச்சு அறிவிப்பு



தீ விபத்துக்கு உள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து 40 வீதமான பிளாஸ்டிக் கழிவுகள் மாத்திரமே கரையொதுங்கியுள்ளன என சுற்றாடல் அமைச்சு அறிவித்துள்ளது.

ஏனைய 60 வீதமான பிளாஸ்டிக் கழிவுகள் தொடர்பாக உரிய தரவுகள் கிடைக்கவில்லை என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டார்.

கரையொதுங்கிய ஆயிரத்து 34 தொன் பிளாஸ்டிக் கழிவுகள் 44 கொள்கலன்களில் வத்தளை பகுதியிலுள்ள களஞ்சியசாலை ஒன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன என அவர் கூறினார்.

# தனிமைப்படுத்தல் சட்டம் மீறிய திருமண நிகழ்வு பாணந்துறையில்

பாணந்துறை வடக்கு பள்ளமுள்ள பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி திருமண நிகழ்வொன்றில் கலந்துகொண்ட சிலர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

12 ஆண்கள் மற்றும் 8 பெண்கள் இவ்வாறு குறித்த திருமண நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அனைவரும் குறித்த வீட்டிலேயே 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

# சிறுவன் துஷ்பிரயோகம்; பெண் ஊழியர் கைது!

கண்டி பஹிரவகந்த பிரதேசத்தில் அமைந்துள்ள மிட்டாய் உற்பத்தி நிறுவனம் ஒன்றில் பயிற்சி பெற்று வரும் சிறுவன் ஒருவனை கொடூரமாகத் தாக்கி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் குறித்த நிறுவனத்தின் பெண் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி கெடவல விசேட தேவையுடைய குழந்தைகளுக்கான அரச தொழில் பயிற்சி நிறுவனத்தால் குறித்த சிறுவன் அந்த நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளான்.

மிட்டாய் உற்பத்தி நிறுவனத்திற்கு இவ்வாறு மூன்று சிறுவர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர்களை வீடுகளுக்கு செல்ல விடாமல் நாளாந்தம் கொடூரமாகத் தாக்கி பணியில் ஈடுபடுத்தினர் எனப் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், குறித்த பெண் ஊழியர் அவரது பாலியல் ஆசையை தீர்த்துக் கொள்வதற்காக குறித்த சிறுவர்களை பலவந்தப்படுத்தியுள்ள நிலையில், அதற்கு இணங்காத சிறுவர்களை கொடூரமாகத் தாக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு உள்ளான மேலும் இரண்டு சிறுவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

தப்பிச்சென்ற சிறுவர்கள் வழங்கிய தகவலுக்கு அமைய நிறுவனத்தில் இருந்த மற்றைய சிறுவனின் பெற்றோருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் கண்டி பொலிஸார் குறித்த இடத்தைச் சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது, மீட்கப்பட்ட சிறுவன் வைத்திய பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளான்.

கைது செய்யப்பட்ட 41 வயதுடைய பெண்ணுக்கு மேலதிகமாக குறித்த மிட்டாய் நிறுவனத்தின் உரிமையாளர் மற்றும் அவரது மகன் ஆகியோர் சிறுவர்களுக்கு ஆபாச படங்களை காண்பித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை மிட்டாய் நிறுவனத்தின் உரிமையாளர் பொலிஸில் சரணடைந்துள்ள நிலையில் அவருக்கு எதிராக பெண் துஷ்பிரயோக வழக்கு ஒன்று தற்போது நீதிமன்ற விசாரணையில் உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# முல்லைத்தீவில் தொடர்ச்சியாக மீட்கப்படும் வெடிபொருள்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மை நாள்களாக நாளாந்தம் வெடிபொருள்கள் மீட்கப்படுவதும் வெடிப்பு சம்பவங்களும் பதிவாகி வருகின்றன.

அந்த வகையில் கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு. சிலாவத்தை பகுதியில் லதனி சிறுவர் இல்லத்துக்கு அருகில் சில வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளதோடு, முல்லைத்தீவு நகர் பகுதியில் சுனாமி நினைவாலயத்துக்கு அருகிலும் வெடிபொருள்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை இன்று (புதன்கிழமை) முல்லைத்தீவு சாலைப்பகுதியில் கடற்படையினரால் வெடிபொருள்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

இரண்டு குண்டுகள், ஒரு கிளைமோர் குண்டு உள்ளிட்ட வெடிபொருள்கள் இதன்போது மீட்கப்பட்டுள்ளன என முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போரின் போது பாவிக்கப்பட்ட குறித்த வெடிபொருள்கள் நிலத்தில் மறைத்துவைக்கப்பட்ட நிலையில் கடற்படை புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக மீட்கப்பட்டுள்ளன.



குறித்து வெடிபொருள்கள் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்து மீட்கப்பட்ட வெடிபொருள்களை தகர்த்து அழிப்பதற்காக சிறப்பு அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார்கள்.

# இதுவரை 26 லட்சத்து 97ஆயிரத்து 778 பேருக்கு கொவிட் தடுப்பூசி முதலாவது டோஸ் போடப்பட்டது

நாட்டில் இதுவரை 26 லட்சத்து 97 ஆயிரத்து 778 பேருக்கு கொவிட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, நேற்று (செவ்வாய்க்கிழமை) மாத்திரம் 61 ஆயிரத்து 255 பேருக்கு சீனாவின் சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

மேலும், சினோபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் நேற்று 43 ஆயிரத்து 999 பேருக்கு போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை 3 லட்சத்து 75 ஆயிரத்து 784 பேருக்கு கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரை ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 795 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் அபிவிருத்தி பணிகளில் ஈடுபட்டுள்ள சீன பிரஜைகள் 2 ஆயிரத்து 865 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதுடன் 2 ஆயிரத்து 435 பேருக்கு இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.06.2021இல் வெளியிடப்பெற்றது.